அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அனைத்துலகப் பொதுத்தேர்வு

# 2023

# தமிழ்

# ஆண்டு 5

| | |
|---|---|
| **நேரம்: 120 மணித்துளிகள்** | **மொத்தப்புள்ளிகள்: 80**<br>(எழுதுதல் 65 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்) |
| **நாள்: 03.06.2023** | **பக்கங்கள்: 12** |

**சுட்டெண்:** | | | | | | | | | | |

## பகுதி 1 - எழுதுதல்

**1. மிகப்பொருத்தமான விடையின் முன் உள்ள கூட்டினுள் புள்ளடியிடுக.**

1. இளங்கோ அடிகள் இயற்றிய நூல்

☐ சிலப்பதிகாரம் ☐ மணிமேகலை ☐ வளையாபதி

2. பலவின்பாலுக்குரிய சொல்

☐ நண்பி ☐ பூக்கள் ☐ சிறுவர்கள்

3. தட்டிக்கொடுத்தல் என்ற மரபுத்தொடரின் பொருள்

☐ ஏமாற்றுதல் ☐ ஊக்கமளித்தல் ☐ உதவமறுத்தல்

4. மயிலுக்குக் குழாம் போல யானைக்கு

☐ பந்தி ☐ கூட்டம் ☐ நிரை

5. நாங்கள்

☐ பாடுகின்றோம் ☐ பாடுகிறேன் ☐ பாடுகிறீர்கள்

6. மறைதல் என்பதன் எதிர்ப்பொருட் சொல்

☐ தோன்றுதல் ☐ மலர்தல் ☐ கூம்புதல்

7. சிறுகூலங்களுள் ஒன்று

☐ கடுகு ☐ அரிசி ☐ சாமை

8. பாலைநிலச் செடிகளுள் ஒன்று

☐ வேம்பு ☐ கள்ளி ☐ மாமரம்

9. வரைகின்றார்கள் என்ற சொல் குறிக்கும் காலம்

☐ நிகழ்காலம் ☐ இறந்தகாலம் ☐ எதிர்காலம்

10. ஒலிம்பிக் சுடர் ஏற்றப்படும் நாடு

☐ இத்தாலி ☐ கிரேக்கம் ☐ சீனா

11. தமிழரது கட்டடக் கலைக்குச் சான்றாக விளங்குவது

☐ மாமல்லபுரம் ☐ சித்தன்னவாசல் ☐ தஞ்சைப் பெரிய கோவில்

12. பாடகன் என்பதன் எதிர்ப்பாற் சொல்

☐ பாட்டி ☐ பாடகி ☐ சிறுமி

13. கல்லில் செதுக்கப்படுவது

☐ சிற்பம் ☐ ஓவியம் ☐ நாடகம்

14. கடல் + கரை என்பதைச் சேர்த்து எழுதினால்

☐ கடல்கரை ☐ கடற்கரை ☐ கடக்கரை

15. அப்பாவின் அண்ணா எனக்கு

☐ மாமா ☐ தாத்தா ☐ பெரியப்பா

(15 X 1 = 15 புள்ளிகள்)

**2. தரப்பட்டுள்ள சொல்லியங்களின் உறுப்புகளை நிரற்கூட்டில் எழுதுக.**

1. மலர்விழி அழகான ஓவியத்தை வரைந்தாள்.
2. தம்பி பந்தை மெதுவாக உருட்டினான்.
3. நாம் நல்ல நூல்களை வாசிப்போம்.

| | எழுவாய் | செயப்படுபொருள் | பயனிலை |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |

(9 X 1 = 9 புள்ளிகள்)

**3. பொருத்தமான முடிக்கும் சொல்லைத் தெரிவுசெய்து எழுதுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| போற்றுவர் | முத்தமிழ் | வீசுகின்றன | தெரியும் | மொழி |

1. இயல், இசை, நாடகம் என்பன __________________________________.
2. பட்டிப் பொங்கலன்று மாடுகளைப் __________________________________.
3. ஓர் இனத்தின் அடையாளம் __________________________________.
4. பூக்கள் மலர்ந்து மணம் __________________________________.
5. விளையும் பயிரை முளையிலே __________________________________.

(5 X 1 = 5 புள்ளிகள்)

**4. தரப்பட்டுள்ள சொற்களை உமது வாழிடமொழியில் வாசித்து, தமிழில் மாற்றி எழுதுக.**

| ஆங்கிலம்: | யேர்மனி: | நோர்வே: |
|---|---|---|
| 1. Elephant | 1. Elefant | 1. Elefant |
| 2. Chilly | 2. Chili | 2. Chili |
| 3. Bicycle | 3. Fahrrad | 3. Sykkel |
| 4. Black | 4. Schwarz | 4. Svart |
| 5. Students | 5. Schüler | 5. Elever |
| 6. Rain | 6. Regen | 6. Regn |

| இத்தாலி: | நெதர்லாந்து: | டென்மார்க்: |
| --- | --- | --- |
| 1. Elefante | 1. Olifant | 1. Elefant |
| 2. Peperoncino | 2. Chilipeper | 2. Chili |
| 3. Bicicletta | 3. Fiets | 3. Cykel |
| 4. Nero | 4. Zwart | 4. Sort |
| 5. Studenti | 5. Studenten | 5. Elever |
| 6. Pioggia | 6. Regen | 6. Regn |

| சுவீடன்: | பின்லாந்து: | தமிழ்: |
| --- | --- | --- |
| 1. Elefant | 1. Elefantti | 1. ______________________ |
| 2. Chili | 2. Chili | 2. ______________________ |
| 3. Cykel | 3. Polkupyörä | 3. ______________________ |
| 4.  Sockerrör | 4. Musta | 4. ______________________ |
| 5. Elever | 5. Oppilaat | 5. ______________________ |
| 6. Regn | 6. Sade | 6. ______________________ |

(6 X 1 = 6 புள்ளிகள்)

**5. அடைப்புக்குறிக்குள் இருக்கும் சொற்களைப் பொருத்தமாக மாற்றி எழுதுக.**

1. நாம் ______________________________ பார்க்கிறோம். (கண்)

2. வானதி குடையின்றி ______________________________ நனைந்தாள். (மழை)

3. ஆசிரியர் சிறந்த ______________________________ப் பாராட்டினார். (மாணவர்கள்)

4. சேயோன் ______________________________ உதவி செய்தான். (நண்பன்)

5. உலகம் ______________________________ சிறப்பைப் போற்றுகிறது. (திருக்குறள்)

(5 X 1 = 5 புள்ளிகள்)

**6. வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. "அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே" என்ற பாடலைப் பாடியவர் யார்?

______________________________________________________________

2. ஒலிம்பிக் கொடியிலுள்ள வளையங்கள் எவற்றைக் குறிக்கின்றன?

______________________________________________________________

______________________________________________________________

3. தைத்திருநாளின் வேறு பெயர் என்ன?

______________________________________________________________

4. ஓடினான் என்ற சொல்லின் திணை, பால் என்பவற்றை எழுதுக.

திணை: ______________________ பால்: ______________________________

5. பறவை கூடு கட்டியது. இதைப் பன்மைச் சொல்லியமாக மாற்றி எழுதுக.

______________________________________________________________

(5 X 2 = 10 புள்ளிகள்)

**7. தரப்பட்டுள்ள தலைப்புகளுள் ஒன்றைத் தெரிவுசெய்து 50 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. நட்பு 2. மன்னார் 3. சுற்றுலா

(15 புள்ளிகள்)

## பகுதி 2
## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுமையான விடை எழுதுக.**

உலகில் பலரும் தேநீரை விரும்பிப் பருகுகிறார்கள். தேநீர் தேயிலையில் இருந்து ஆக்கப்படுகிறது. தேயிலையை உலகுக்கு அறிமுகப்படுத்தியவர்கள் சீனர்கள். தேயிலை சீனா, இந்தியா, ஈழம், இந்தோனேசியா போன்ற நாடுகளில் பயிரிடப்படுகிறது. இது ஈரலிப்பான ஓரளவு வெப்பமுள்ள மலைப்பாங்கான பகுதிகளில் செழித்து வளரும். தேயிலை பயிரிடப்படும் இடங்களைத் தேயிலைத் தோட்டங்கள் என்று அழைப்பார்கள். ஈழத்தில் பிரித்தானியரால் தேயிலை அறிமுகப்படுத்தப்பட்டது. ஈழத்தின் மலையகத்தில் தேயிலைத் தோட்டங்கள் உள்ளன. அத்தோட்டங்களில் பணி செய்வதற்காக, பிரித்தானியர் இந்தியாவிலிருந்து தமிழர்களைக் கொண்டு வந்தார்கள். அவர்களை மலையகத்தில் குடியேற்றினார்கள்.

1. தேயிலையிலிருந்து ஆக்கப்படுவது எது?

______________________________

______________________________

2. தேயிலையை உலகுக்கு அறிமுகப்படுத்தியவர்கள் யாவர்?

______________________________

______________________________

3. தேயிலை பயிரிடப்படும் நாடுகள் இரண்டு எழுதுக.

______________________________

______________________________

4. ஈழத்தில் தேயிலைத் தோட்டங்கள் எங்கு உள்ளன?

______________________________

______________________________

5. இந்தியாவிலிருந்து தமிழர்கள் யாரால் கொண்டு வரப்பட்டார்கள்?

______________________________

______________________________

(5 X 2 = 10 புள்ளிகள்)

2. தரப்பட்டுள்ள குறிப்புகளை வாசித்து, அதன் கீழுள்ள கூற்றுகள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுக.



தலைநகரம் பேர்லின்



**மக்கள்தொகை**
88 மில்லியனுக்கு மேல்

**16 மாநிலங்கள்**








உலகப் புகழ்பெற்ற அறிஞரும் மருத்துவருமான அல்பிரட் சுவைட்சர் பிறந்த நாடு

**அடையாளம்**
பிரான்டென்பூர்க் வாயில்

1. யேர்மனியின் தலைநகரம் பேர்லின். ( )
2. பிரான்டென்பூர்க் வாயில் பிரான்சு நாட்டின் அடையாளம். ( )
3. யேர்மனி 14 மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ( )
4. உலகப் புகழ்பெற்ற அல்பிரட் சுவைட்சர் யேர்மனியில் பிறந்தார். ( )
5. யேர்மனியில் 88 மில்லியனுக்கு மேற்பட்ட மக்கள் வாழ்கின்றார்கள். ( )

(5 X 1 = 5 புள்ளிகள்)

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| எழுதுதல் | | | | |
| 1 | 15 | | | |
| 2 | 09 | | | |
| 3 | 05 | | | |
| 4 | 06 | | | |
| 5 | 05 | | | |
| 6 | 10 | | | |
| 7 | 15 | | | |
| வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் | | | | |
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |